உ

சிவ சிவ

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர்

அருளிய

திருஎறும்பியூர்த் தேவாரம்

இலவச வெளியீடு

★

திருஎறும்பியூர் மலைக்கோயிலில்

மூன்றாவது கூட்டு வழிபாடு

22—4—1962

சிவ சிவ

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர்

அருளிய

திருஎறும்பியூர்த் தேவாரம்

★

திரிசிரபுரம் மௌனகுரு
வார வழிபாட்டுக் கழகத்தார்
திருச்சிராப்பள்ளி-2

★

இலவச வெளியீடு

திருஎறும்பியூர் மலைக்கோயிலில்
மூன்றாவது கூட்டு வழிபாடு
22—4—1962

★

இச்சிறு வெளியீடு
திருச்சிராப்பள்ளி
பிரபல ஜவுளி வியாபரம்
மாரியப்பா ஸ்டோர்ஸ் மேனேஜரும்
திருசிரபுரம்
மௌனகுரு வார வழிபாட்டுக் கழக
அங்கத்தினரும் ஆகிய
திருவாளர் K. தாயுமான் பிள்ளை அவர்களின்
நன்கொடையால் வெளியிடப்பெற்றது.

★

ஆனந்தா அச்சகம் - திருச்சி-2.

உ

சிவ சிவ

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர்

அருளிச்செய்த

திருஎறும்பியூர்த் தேவாரம்

திருக்குறுந்தொகை [5-ம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

விரும்பி யூறு விடேல்மட நெஞ்சமே
கரும்பி னூறல்கண் டாய்கலந் தார்க்கவன்
இரும்பி னூறல ருததோர் வெண்டலை
எறும்பி யூர்மலை யான்எங்கள் ஈசனே. 1

பிறங்கு செஞ்சடைப் பிஞ்ஞகன் பேணுசீர்க்
கறங்கு பூத கணமுடைக் கண்ணுதல்
நறுங்கு ழல்மட வாளொடு நாடொறும்
எறும்பி யூர்மலை யான்எங்கள் ஈசனே. 2

மருந்து வானவர் தானவர்க் கின்சுவை
புரிந்த புன்சடைப் புண்ணியன் கண்ணுதல்
பொருந்து பூண்முலை மங்கைநல் லாளொடும்
எறும்பி யூர்மலை யான்எங்கள் ஈசனே. 3

நிறங்கொள் கண்டத்து நின்மலன் எம்மிறை
மறங்கொள் வேற்கண்ணி வாணுதல் பாகமாய்
அறம்பு ரிந்தருள் செய்தான் அங்கணன்
எறும்பி யூர்மலை யான்எங்கள் ஈசனே. 4

நறும்பொன் நாண்மலர்க் கொன்றையும் நாகமும்
துறும்பு செஞ்சடைத் தூமதி வைத்துவான்
உறும்பொன் மால்வரைப் பேதையோ டூர்தொறும்
எறும்பி யூர்மலை யான்எங்கள் ஈசனே. 5

கறும்பி யூர்வன ஐந்துள காயத்தில்
திறம்பி யூர்வன மற்றும் பலவுள
குறும்பி யூர்வதோர் கூட்டகத் திட்டெனை
எறும்பி யூரரன் செய்த இயற்கையே. 6

மறந்து மற்றிது பேரிடர் நாடொறும்
திறம்பி நீநினை யேல்மட நெஞ்சமே
புறஞ்செய் கோலக் குரம்பையி லிட்டெனை
எறும்பி யூரரன் செய்த இயற்கையே 7

இன்ப மும்பிறப் பும்இறப் பின்னொடு
துன்ப மும்முட னேவைத்த சோதியான்
அன்ப னேஅர னேயென் றரற்றுவார்க்
கின்ப னாரும் எறும்பியூர் ஈசனே. 8

கண்ணி றைந்த கனபவ ளத்திரள்
விண்ணி றைந்த விரிசுடர்ச் சோதியான்
உள்நி றைந்துரு வாய்உ யி ராயவன்
எண்ணி றைந்த எறும்பியூர் ஈசனே. 9

நிறங்கொள் மால்வரை ஊன்றி எடுத்தலும்
நறுங்கு ழல்மட வாள்நடுக் கெய்திட
மறங்கொள் வாளரக் கன்வலி வாட்டினான்
எறும்பி யூர்மலை எம்மிறை காண்மினே. 10

திருச்சிற்றப்பலம்

திருத்தாண்டகம் [-6ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

பன்னியசெந் தமிழறியேன் கவியேன்மாட்டேன்
எண்ணோடு பண்ணிறைந்த கலைக ளாய
தன்னையுந்தன் திறத்தறியாப் பொறியிலேனைத்
தன்திறமும் அறிவித்து நெறியுங் காட்டி

அன்னையையும் அத்தனையும் போல அன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்தென்னை யாளாக் கொண்ட
தென்னெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 1

பளிங்கின்நிழ லுட்பதித்த சோதி யானைப்
பசுபதியைப் பாசுபத வேடத் தானை
விளிந்தெழுந்த சலந்தரனை வீட்டி னானை
வேதியனை விண்ணவனை மேவி வையம்
அளந்தவனை நான்முகனை அல்லல் தீர்க்கும்
அருமருந்தை ஆமா றறிந்தென் உள்ளந்
தெளிந்தெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 2

கருவையென்றன் மனத்திருந்த கருத்தை ஞானக்
கடுஞ்சுடரைப் படிந்துகிடந் தமரர் ஏத்தும்
உருவையண்டத் தொருமுதலை யோத வேலி
உலகினிறை தொழிலிறுதி நடுவாய் நின்ற
மருவை வென்ற குழல்மடவாள் பாகம்
வைத்தமயானத்து மாசிலா மணியை வாசத்
திருவெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 3

பகழிபொழிந் தடலரக்கர் புரங்கள் மூன்றும்
பாழ்படுத்த பரஞ்சுடரைப் பரிந்து தன்னைப்
புகழுமன்பர்க் கின்பமரும் அமுதைத் தேனைப்
புண்ணியனைப் புவனியது முழுதும் போக
உமிழும்அம்பொற் குன்றத்தை முத்தின் தூணை
உமையவள்தம் பெருமானை இமையோ ரேந்துந்
திகழெறும்பி யூர்மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 4

பாரிடங்க ளுடன்பாடப் பயின்று நட்டம்
பயில்வானை அயில்வாய சூல மேந்தி
நேரிடும்போர் மிகவல்ல நிமலன் தன்னை
நின்மலனை அம்மலர்கொண் டயனும் மாலும்
பாரிடந்தும் மேலுயர்ந்துங் காணு வண்ணம்
பரந்தானை நிமிர்ந்துமுனி கணங்க ளேத்துஞ்
சீரெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 5

கார்முகிலாய்ப் பொழிவானைப் பொழிந்த முந்நீர்
கரப்பானைக் கடியநடை விடையொன் றேறி
ஊர்பலவுந் திரிவானை ஊர தாக
ஒற்றியூர் உடையனுய் முற்றும் ஆண்டு

பேரெழுத்தொன் றுடையானைப் பிரம னோடு
மாலவனும் இந்திரனும் மந்திரத்தா லேத்துஞ்
சீரெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 6

நீணிலவும் அந்தியும நீரும் மற்றை
நெறியிலங்கு மிருகாலும் ஆகா சம்மும்
வாணிலவு தாரகையும் மண்ணும் விண்ணும்
மன்னுயிரும் என்னுயிருந் தானுஞ் செம்பொன்
ஆணியென்றும் அஞ்சனமா மலையே யென்றும்
அம்பவளத் திரளென்றும் அரிந்தோ ரேத்துஞ்
சேணெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே .7

அறந்தெரியா ஊத்தைவாய் அறிவில் சிந்தை
யாரம்பக் குண்டரோ டயர்த்து நாளும்
மறந்துமரன் திருவடிகள் நினைய மாட்டா
மதியிலியேன் வாழ்வெலாம் வாளா மண்மேற்
பிறந்தநாள் நாளல்ல வாளா ஈசன்
பேர்பிதற்றிச் சீரடிமைத் திறத்து ளன்பு
செறிந்தெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 8

அறிவிலங்கு மனத்தானை அறிவார்க் கன்றி
அறியாதார் தந்திறத்தொன் றறியா தானைப்
பொறியிலங்கு வாளரவம் புனைந்து பூண்ட
புண்ணியனைப் பொருதிரைவாய் நஞ்ச முண்ட
குறியிலங்கு மிடற்றானை மடல்தேன் கொன்றைச்
சடையானை மடைதோறுங் கமல மென்பூச்
செறியெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 9

அருந்தவத்தின் பெருவலியா லறிவ தன்றி
அடலரக்கன் தடவரையை யெடுத்தான் திண்டோள்
முரிந்துநெரிந் தழிந்துயா தாள முற்று
முன்கைரம் பினையெடுத்துக் கீதம் பாட
இருந்தவனை யேழுலகு மாக்கி னானை
எம்மானைக் கைம்மாவி னுரிவை போர்த்த
திருந்தெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 10

திருச்சிற்றம்பலம்

திருஎறும்பியூர்

சோழவள் நாட்டில் காவிரிக்குத் தென்பால் திகழும் சிவத்தலங்களுள் 6-வது தலம் திருஎறும்பியூர் ஆகும். இது மிகத் தொன்மை வாய்ந்தது; இத்தலம் திருச்சிராப்பள்ளிக்குக் கிழக்கே தஞ்சை செல்லும் பெருவழியில் சுமார் 5 மைலில் உள்ளது; மலைக்கோயிலாகத் திகழ்வது. இத்திருக்கோயில் தென்கயிலாயம் எனவும், மணிக்கூடம் எனவும், இரத்தின கூடம் எனவும் பெயர் பெறும். இறைவனின் திருப்பெயர்: எறும்பீசர், மாணிக்கநாதர். தேவியின் திருப்பெயர்: நறுங்குழல்நாயகி, சௌந்திரநாயகி. தல விருட்சம்: வில்வமரம். தீர்த்தம்: பிரம தீர்த்தம் (தெப்பக்குளம்), பதும தீர்த்தம் (கோயிலின் வடகிழக்கில் உள்ளது.) குமார தீர்த்தம் (கோயிலின் வடபால் உள்ளது.) முதலியன.

இத்தலத்து மூல லிங்கமூர்த்தி சுயம்பு மூர்த்தி ஆவர். இவர்க்குச் சிரசில் தண்ணீர் படாமல் கீழ்ப் பீடங்களில் அபிஷேகம் நடைபெறும்.

தேவேந்திரன், தேவர்கள், கரன் என்னும் அரக்கன் இவர்கள் எறும்பு வடிவுகொண்டு இறைவனைப் பூசித்ததால் எறும்பியூர் எனப் பெயர் வழங்கலாயிற்று. இத்தலத்தில் இந்திரன் பூசிக்குங்கால் இறைவன் முடிசாய்த்து ஏற்றுக்கொண்டார் என்பது வரலாறு.

இவ்வாலயத்தில் காலை, உச்சி, மாலை, அர்த்தசாமம் என்ற நான்கு வேளைகளிலும் பூசை நடைபெறுகின்றது. இத்தலத்தில் வைகாசி மாதத்தில் திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது.

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க;
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க;
குறைவிலா(து) உயிர்கள் வாழ்க;
நான்மறை அறங்கள் ஓங்க;
நற்றவம் வேல்வி மல்க;
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக; உலக மெல்லாம்.

— கந்தபுராணம்.